மெட்ரோ ரெயில் அலுவலகத்துக்கு

# சிறந்த பசுமை கட்டிடத்துக்கான சான்றிதழ்

## அமெரிக்கா நிறுவனம் வழங்கியது

சென்னை, ஜூலை.11–
அமெரிக்காவில் செயல்பட்டு வரும் 'கிரீன் பில்டிங் கவுன்சில்' கடந்த 2009–ம் ஆண்டு முதல், உலக அளவில் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களை ஆய்வு செய்து தரமான கட்டிடங்களுக்கு பசுமை கட்டிடத்துக்கான 'தங்க மதிப்பீட்டு தரச்சான்றிதழை' வழங்கி வருகிறது.

அந்தவகையில் சென்னை கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலக் கட்டிடத்தை இந்த கவுன்சில் ஆய்வு செய்தது. இதில் கட்டிடத்தின் நிலையான தளங்கள், மின்சார பயன்பாடு, சுற்றுச்சூழல் மேம்பாடு, குடிநீர் சேமிப்பு, கட்டிட வடிவமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்தது.

இதன் மூலம் 70 புள்ளிகளை இந்த கட்டிடம் பெற்றது. அதனடிப்படையில் மெட்ரோ ரெயில் நிர்வாக அலுவலக கட்டிடத்துக்கு, பசுமை கட்டிடத்துக்கான தங்க மதிப்பீட்டு தரச்சான்றிதழை, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன நிர்வாக அலுவலர் பங்கஜ்குமார் பன்சாலிடம் 'கிரீன் பில்டிங் கவுன்சில்' நிர்வாக இயக்குனர் பி.கோபாலகிருஷ்ணன் வழங்கினார். நிகழ்ச்சியின் போது மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

மேற்கண்ட தகவலை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.